**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் மானாமதுரை**

**ஓ.எஸ்.40/2025**

**2025 – ம் ஆண்டு நவம்பர் மாதம் 7 – ம் நாள் வெள்ளிக் கிழமை**

**வாதி – பிரதிவாதிகளின் சாட்சியின் வாக்குமூலம். 1869 ம் ஆண்டு சட்ட எண். 44 வது பிரிவு 6 (1) ன் படி கிரேடு III பெஞ்ச் கிளார்க் திரு.பி.இளங்கோவன் என்பவரால் உறுதிப்பிரமாணம் செய்யப்படுகிறது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **பெயர்** | : | **பெரியசாமி** | **சாதி** | : | |
| **த/பெ** | : | | **சமயம்** | : | |
| **கிராமம்** | : | | **தொழில்** | : | |
| **வட்டம்** | : | | **வயது** | : | |

**வா.சா. 1 ஆஜர்.**

**<u>முதல் விசாரணை</u>**

நான் இந்த வழக்கின் வாதி தரப்பில் 1 வது சாட்சியாக சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். என் தரப்பில் பிரமாண நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விபரங்களை படித்துப் பார்த்து கையொப்பம் செய்துள்ளேன். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விபரங்கள் எனக்குத் தெரியும். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். எனது தரப்பில் ஆவணங்களை குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

1. 07.06.2021 ம் தேதியிட்ட ராஜேஸ்வரியின் இறப்பு சான்று அசல் வா.சா.ஆ 1

2. 27.07.2022 ம் தேதியிட்ட வாதி வாரிசு சான்று கேட்டுஇணையவழியில் 2 ம் பிரதிவாதியிடம் மனு செய்ததில் Application Rejected என 2 ம் பிரதிவாதி கொடுத்த Status Report அசல் வா.சா.ஆ 2

3. வாதியின் ஆதார் அட்டை அசல் வா.சா.ஆ 3

4. 31.08.2018 ம் தேதியிட்ட L & T Finance LTD நிதி நிறுவனத்தின் கடன் கணக்கு புத்தகம் நகல் வா.சா.ஆ 4

5. 12.05.2010 ம் தேதியிட்ட வாதியின் தந்தை கணேசனின் இறப்பு சான்று அசல் வா.சா.ஆ 5

6. 10.05.2010 ம் தேதியிட்ட வாதியின் தந்தை கணேசனின் வாரிசு சான்று அசல் வா.சா.ஆ 6

7. 06.09.2018 ம் தேதியிட்ட வாதியின் தாயார் முத்துலெட்சுமியின் இறப்பு சான்று அசல் வா.சா.ஆ 7

8. 08.07.2020 ம் தேதியிட்ட ராஜேஸ்வரியின் கணவர் ராமலிங்கத்தின் இறப்பு சான்று அசல் வா.சா.ஆ 8

9. 05.10.2014 ம் தேதியிட்ட ராஜேஸ்வரியின் தாயார் ராஜம்மாளின் இறப்பு சான்று அசல் வா.சா.ஆ 9

10. 29.12.2020 ம் தேதியிட்ட வாதியின் சகோதரர் சேதுராமச்சந்திரன் இறப்பு சான்று நகல் வா.சா.ஆ 10

பிராதுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் வாரிசு சான்று கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். ராஜேஸ்வரி என்பவருக்கு வாரிசு சான்று கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். ராஜேஸ்வரி எனக்கு அத்தை உறவுமுறை என் தந்தையுடன் உடன் பிறந்த சகோதரி ஆவார்.

ராஜேஸ்வரி என்பவருக்கு குழந்தை இல்லை என்பதனை உங்கள் ஊரில் பொதுவான நபரை விசாரித்தால் உண்மை தெரியவரும் என்றால் சரிதான். ராஜேஸ்வரியின் இறுதி காரியத்தை நான் தான் செய்தேன் என்பதை ஊரில் பொதுவான நபரை விசாரித்தால் உண்மை தெரியவரும் என்றால் சரிதான்.

என்னுடன் பிறந்தவர்கள் என் அண்ணன் சேதுராமசந்திரன் அவர் இறந்து விட்டடார். அவர் திருமணம் ஆன பின்பு இறந்தார். என் அக்காவின் பெயர் விமலாதேவி ஆகும். உங்களுடைய சகோதரியை இறந்து போன நபருக்கு வாரிசுதாரராக அறிவிக்க கோரி ஆட்சேபணை ஏதும் தெரிவிப்பாரா என்றால் இல்லை. சாட்சியம்அளிக்க தயாராக உள்ளார்.

என் பெற்றோர் இறந்தவுடன் என்னை சிறுவயதில் இருந்து வளர்த்ததற்கு ஆவணமாக ஏதும் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால்

என்னை படிக்கவைத்து என் பள்ளி மாற்று சான்றில் பாதுகாவலாக சான்று கையொப்பம் செய்துள்ளார். என் அத்தையின் கணவர் ராமலிங்கத்தின் பெற்றோர்கள் உயிருடன் உள்ளார்களா என்றால் இறந்துவிட்டார்கள். அதற்கான இறப்பு சான்றை தாக்கல் செய்யவில்லை.

நான் 2 ம் பிரதிவாதி அலுவலகத்தில் இறந்து போன ராஜேஸ்வரிக்கு வாரிசு சான்று கேட்டு மனு தாக்கல் செய்திருந்த போது மேற்படி மனுவை நேரடிவாரிசுதாரர் இல்லாததால் மனு நிராகரிக்கப்பட்டது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

–Sd–

Taken down by me in open court
readover/interpreted to the witness in Tamil and
acknowledged by him/her to be correct.

–Sd–
District Munsif,
Manamadurai.